281

TAMIL NADU LEGISLATURE LIBRARY
17 சன 1979
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 செப்டம்பர் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. இராமலிங்க ரெட்டியார் அவர்கள் 8—9—1978-ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. இராமலிங்க ரெட்டியார் 1937-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டுவரை செய்யார் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றி உள்ளார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌனமாக நின்றனர்.)